RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1811

# இருபதாம் நூற்றாண்டு யதார்த்தவாதத் தமிழ்ச் சிறுகதைகளில் காணப்படும் தனிமனித ஒழுக்கம்

**இரா. குமரகுருபரன்** [அ, *]

[அ] தமிழியல் மற்றும் பண்பாட்டுப் புலம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை, இந்தியா.

# Morality and Virtues of the Individuals in the Realistic short stories of the Twentieth Century

**R. Kumaraguruparan** [a, *]

[a] School of Tamil and Cultural Studies, Tamil Nadu Open University, Chennai-600015, Tamil Nadu, India

* Corresponding Author: vinci.illustrator@gmail.com

Received: 18-07-2022
Revised: 11-10-2022
Accepted: 28-10-2022
Published: 08-12-2022

Check for updates

## ABSTRACT

Real stories always contain humanistic elements and it is appealing to the laymen. Realism as a literary approach and the Short story as a literary form, are the gifts of the 19th Century. Realistic stories are based on the life of ordinary people who are facing numerous problems. These stories are about the people who have lost their unity thanks to the displacement from their family roots. Contradictions manifest when they oppose the social customs and cultural sentiments of the majority. They act according to their nature and they never bow down to normal practices. Their human action, truth, degeneration and inner contradictions are well portryed in these stories. VaVeSu Iyer's " Kulathankarai Arasamaram" is a short story that highlights the repercussions of the bankruptcy of the British banking company which shattered the dreams of countless middle class people into pieces which paved the way for the destruction of family life. In Puthumaippithan's "Ponnagaram," the plight of 1930s Chennai slumdwellers who were living in want, with their own cultural ethics which were contrary to others'. Indra Parthasarathy's text " Kadhal Poar Vyapaaram" depicts the decaying culture of the upper hierarchy of the elite in Delhi in the 1980s during the initial stage of Globalization. The text also implies that not all people yielded to such temptations.

**Keywords:** Realism, Naturalism, Personal Ethics, Tamil Short Stories in 1910s, 1930s and 1990s

## முன்னுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடான யதார்த்தவாதம் (Realism) அச்சு வாகனம் வந்ததன் விளைவாக மக்களின் வாசிப்புக்கு மிகவும் நெருக்கமாக அமைந்து பல்வேறு மனித மன, சமூக, அரசியல் மாற்றங்களுக்கு இட்டுச் சென்றது. மார்க்சியம், யதார்த்தவாதத்தை அதன் அடுத்த கட்டமான சோஷலிச யதார்த்தவாதத்திற்கு வளர்த்தெடுத்தது. எனவே மார்க்சியக் கோட்பாட்டுக்குள் நுழையாத இயல்புவாத யதார்த்தவாதிகள் படைப்புகளுக்குள்ளும் வெளிப்பட்ட உண்மை நேர்மைக் கூறுகளை மார்க்சியவாதிகள் கொண்டாடினர்.

சிறுகதை இலக்கிய வகைமை தோன்றி 130 ஆண்டுகள் நிறைந்துவிட்டன. வடிவம், உள்ளடக்கம் குறித்த உரையாடல்கள், அழகியல் நேர்த்தி கச்சிதம், எதிர்பாராத் திருப்பம், முடிப்பு என்று வாதப்பிரதிவாதங்கள் எழுந்து அதற்கான வரையறைகளும் எழுதப்பட்டுவிட்டன.

இயல்புவாத யதார்த்தவாதம், வகைமாதிரிப் பாத்திரங்கள் குறித்த விளக்கத்தை இரத்தினகுமார் தமது நூலில் பின்வருமாறு முன்வைக்கிறார் (Rathinakumar, 2016).

## இயல்புவாத யதார்த்தவாதம்

பிற இலக்கியக் கொள்கைகள் சமூகத்தைச் சிறிது மாற்றியும் திரித்தும் கற்பனையாகப் புனைவு செய்து வழங்குவது போன்று அல்லாமல் சமூகத்தின் இயல்புத்தன்மை மாறாமல் பதிவு செய்கிறது நம்புகிறது, பின்பற்றுகிறது இயல்புவாத யதார்த்தவாதம். ஆக, சமூகத்தை உண்மையாகச் சித்திரிப்பதே பிரதானமாகிறது. மனிதனது நடவடிக்கை, உண்மை, சீரழிவு, முரண் என மானுடத்தின் இயங்கியலே இதன் ஆதாரம். கதைகளின் கருப்பொருளும் மாந்தர்களின் நடைமுறை வாழ்வும் பாசாங்கின்றி அமைவன. இம்முறைக்கு வகை மாதிரிப் பாத்திரங்களை முன்வைக்கின்றனர். மேலும் யதார்த்தவாதம் இரண்டு நிலைகளில் கவனம் கொள்கிறது. 1. வகைமாதிரிப் பாத்திரங்கள் 2. உள்ளடக்கம், உருவம்.

## வகைமாதிரிப் பாத்திரங்கள்

வகைமாதிரிப் பாத்திரங்களை இலக்கியங்களில் உருவாக்கத் தூண்டுவதோடு அவற்றை சமூக மொத்தத்தின் மாதிரியாகப் படைப்பில் அமைக்க விழைகின்றனர். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் பொதுப் பண்புகளின் வெளிப்பாடாகவும் அமையும் இக் கருத்தியல் தனிமனிதனின் பண்பாட்டு நடவடிக்கைகளை வெளிச்சமிட்டுக் காட்டுவதும் உண்டு. தனிப்பட்ட சூழலியல் அமைவுகள், பாத்திரம் பண்புகளின் ஆராய்ந்தறிந்த நிலை, தனி மனித ஆளுமை ஆகியவற்றில்தான் கலையின் முழு சாராம்சமும் இருக்கிறது. இச்சாராம்சத்தை வகைமாதிரிப் பாத்திரங்கள் பிரதிபலிக்க வேண்டும் என்கின்றனர்.

தனிமனித மாதிரிகளைக் கைக்கொள்ளும்போது அங்கு உளவியல் முதன்மைப் படுத்தப் படுகிறது. கலைப் படைப்பிற்குரிய சாராம்சமாக இது அமையும்போது உளவியல் யதார்த்தவியலின் வழிமுறையாகவும் பார்க்கப்படுகிறது. இப்பார்வை மார்க்சியம் அல்லாத யதார்த்தவியல் படைப்புகளில் அதிகம் (Rathinakumar, 2016).

## தனிமனிதக்கொள்கை என்றால் என்ன?

"காவியங்களும் புராணங்களும் தாம் தோன்றிய காலத்து மக்களுக்கு ஒழுக்கம், தெய்வபக்தி ஆகியவற்றை போதிப்பதனவாயமைந்தவை. அவற்றில் வரும் பாத்திரங்களும் பெரும்புகழ் படைத்த உதாரண புருஷராகத் திகழ்ந்தனர். நாவல் இலக்கியங்களிலோ சமூகத்தின் பல்வேறு படிகளுள்ள 'சாதாரண' மக்கள் பாத்திரங்களாக இடம்பெற்றனர். அவர்கள் தனித்தனி மனிதர்கள், குறைபாடுடையவர்கள். பல்வேறு காரணங்களினாலே ஒருமைப்பாட்டை இழந்த சமூகத்தில் குடும்பம், சாதி, வாழிடம், குலத்தொழில் முதலியவற்றிலிருந்து தனிமைப்பட்டும் விலகியும் வாழ நேரும் மக்களே தனி மனிதராவர். வழிவழி வந்த நம்பிக்கைகள், நியதிகள், சமூக உணர்வுகள் ஆகியவற்றிற்கும் தனிமனிதருடைய வாழ்க்கை நிலைக்கும் பொருந்தாமை ஏற்படும்பொழுது முரண்பாடு தோன்றுகின்றது. அந்த முரண்பாட்டினை, அதாவது மனிதருக்குள்ளும் மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையேயும் தோன்றும் மோதலை அடிநிலையாகக் கொண்டதே நாவலிலக்கியம். இதன் காரணமாகவே நாவலில் பாத்திர வார்ப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

மேனாட்டிலே வளர்ந்துள்ளதைப்போல எமது சமூகத்திலே தனிமனிதக்கொள்கை பெருவளர்ச்சி பெறாவிடினும் தவிர்க்க முடியாதபடி அது இங்கும் வளர்ந்துதான் வருகிறது. பழைய நிலமானிய

சமூகத்திலிருந்து விடுபட்டுப் புதிய மத்தியதர வர்க்கம் உருவாகும்பொழுது உடனிகழ்ச்சியாகத் தனிமனிதக் கொள்கையும் பிறக்கிறது. வரலாற்று நியதி அது." என்று 'நாவலிலக்கியமும் தனிமனிதக்கொள்கையும்' என்ற இயலில் பேராசிரியர் குறிப்பிடுகிறார் (Kailasapathy, 2017).

"அண்மைக்கால நாவல்களில் முனைப்பாக இடம்பெறும் பிரச்சினைகளில் ஒன்று மனிதரின் ஒழுக்கப்பண்பு ஆகும். தனிமனிதக்கொள்கை முக்கியம் பெறத்தொடங்கிய கணத்திலே ஒழுக்கவியலும் பிரச்சினைக்குரியதாகுமென்பது கூறாமலே பெறப்படும். ஏனெனில் தனிமனிதவாதம் மாந்தர் கூட்டாக நடந்து கொள்வதைவிட, தனிப்பட்டவர்களின் நோக்கையும் போக்கையும் செயல்களையுமே பெரிதும் சிறப்பித்துப் பாராட்டுகிறது. மாமூலான நியதிகளுக்கும் நடைமுறைகளுக்கும் பணிந்து போகாமல், தனது சுயத்துவத்துடன் தனது சுபாவத்திற்கு அமைய நடந்துகொள்வதே தனிமனிதனது உண்மை இயல்பு என்று தனிமனிதவாதம் கூறும். ஒட்டிப் போகாமல் வெட்டிப் போகின்றவனே மேதை என்பது அவ்வாதத்தின் விழுப்பொருள். முற்பட்ட நாவல்களில் ஒழுக்கவியலென்பது பொதுவாக மாந்தரின் குடும்ப, சமுதாய உறவுகள் சம்பந்தமான ஐயங்கள், மனப்போராட்டங்கள் முதலியவற்றைக் குறித்தது. நமது பழைய மரபிலே 'தர்மம்' என்னும் சொல் குறித்த பரந்து விரிந்த பொருளில் ஒழுக்கவியல் அல்லது ஒழுகலாறு முற்பட்ட நாவல்களில் இடம்பெற்றது. ஆனால் அண்மைக்கால நாவல்களில் பாலுறவு மட்டும் ஒழுக்கப் பிரச்சினையாக விதந்துரைக்கப்படுகின்றது விவாதிக்கப்படுகின்றது. அதீத தனிமனிதப்போக்கு, பாலுறவு அக்கறை ஆகியவற்றை நாவலில் முதன்மைப்படுத்துவோர் தவிர்க்க இயலாதவாறு உளவியலுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர்.

தனிமனிதவாதம், தார்மீகப் பிரச்சினை, பாலுறவுப் பிரச்சினை, உளவியல் அக்கறை முதலியன நகரவாழ்க்கையிலேயே உயர்மட்டத்து மாந்தர் வாழ்க்கையில் பூதாகரமாகத் தெரிகின்றன....

விடுதலைக்குப் பின் மெல்ல மெல்ல இந்தியப் பெருநகரங்களில் பரிணமித்த தொழிலதிபர்கள், அரசியல் தலைவர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள், இவர்களைச் சார்ந்து வாழும் வக்கீல்கள், டாக்டர்கள், பத்திரிகையாளர்கள், உயர்ரக விபசாரிகள் அல்லது பொழுதுபோக்கிற்குரிய பெண்கள் முதலியோரே நகர நாகரீகத்தைச் சித்திரிக்கும் இடத்தைப் பெற்று வருகின்றனர்.

தமிழ் நாவலிலக்கிய உலகம் இரு துருவங்களாகப் பிளவுண்டு கிடக்கிறது. அதீத தனிமனித நாவல்கள் ஒருபுறம் எழுந்துவரும் சமுதாய சக்திகளைக் கூட்டாக எடுத்துக்காட்டும் நாவல்கள் மறுபுறம். இவை ஒன்றற்கொன்று முரண்படுவனவே. ஆயினும் நாவலிலக்கியம் தனிமனிதரையும் சமூக இயக்கங்களையும் இணைக்கவல்லது. தனிமனிதனையும் சமுதாயத்தையும் முரண்பாட்டுச் சக்திகளாகக் காணும் பூர்ஷ்வா சிந்தனை முறையே இந்த அவலநிலைக்குக் காரணம். சமுதாய மாற்றத்திலும், சோஷலிஸ அமைப்பிலுமே மனிதன் மீண்டும் தன்னைப் பூரணமாக அறிந்து முழுமையடைய முடியும் என்ற உண்மை உணரப்படும் பொழுதே இரு துருவங்களாகக் காணப்படும் நிலைமை இல்லாமற் போகும். அப்பொழுதே நாவல் இலக்கியம் முழுமை எய்தும்." என்று தமிழ் நாவலின் அண்மைக்காலப் போக்குகள் என்ற இயலில் குறிப்பிடுகிறார் (Kailasapathy, 2017).

இந்த அளவுகோலை சில சிறுகதைகளுக்கும் பொருத்திப் பார்க்கத் தோன்றுகிறது. இருபதாம் நூற்றாண்டின் வெவ்வேறு காலகட்டத்தில் வெளியான சிறுகதைகள் மூன்றினூடாக அலசிப்பார்ப்பதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கம்.

## 1910 களின் "குளத்தங்கரை அரசமரம்"

"The Crash of Arbuthnot and Co. - ஆர்பத்நாட் கம்பெனியாரின் சிதறுதல்" என்று 27/10/1906 - 'இந்தியா' இதழில் மகாகவி பாரதியார் சாடி எழுதுகிறார். "ஆர்பத்நாட் கம்பெனி இப்படி முழுகிப் போய், தென்னிந்தியாவிலே எண்ணிறந்த குடும்பத்தார்கள் அடைந்திருக்கும் ஸ்திதி நெஞ்சுருகத்தக்கதாக இருக்கின்றது. ஆனால், இந்தக் கம்பெனியார் தனக்கு இன்ஸால்வெண்ட் ஸ்திதி வரப்போகிறதென்று அதற்கிணங்கியபடி வஞ்சக நெஞ்சமில்லாமல் நடந்து கொண்டார்களா என்பதைப்பற்றி சில சமுசயங்கள் ஏற்படுகின்றன" என்று புலனாய்வு செய்கிறார் (Viswanathan, 1998).

"சொற்ப சம்பளம் வாங்கி அரை வயிற்றுக்குச் சாப்பிட்டுக் கொண்டு பாக்கியையெல்லாம் வயதுகாலத்தின் பொருட்டு மிச்சம் வைத்திருக்கும் நம்மவர்களுக்கு வெள்ளிடி விழுந்தாற்போல் இப்படி நஷ்டமுண்டாகிவிட்டதேயென்பதைப் பற்றித்தான் நாம் விசனமடைகின்றோம்.

இவர்களெல்லாம் இப்படி நாசமடைவதற்குச் சர்க்கார்விதியொன்று பெருந்துணையாக இருந்திருக்கிறது. அதாவது, கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் மற்ற ஜனங்களுடன் எவ்விதமான கொடுக்கல் - வாங்கல் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும், வெள்ளைக்கார பாங்கிகளில்தான் கொடுக்கல் - வாங்கல் வைத்துக்கொள்ளலாமென்றும் ஒரு விதியிருக்கின்றது. … சுதேசிய பாங்கிகள் தேசமுழுதும் மூலைக்கு மூலை கிளம்புவது இந்தச் சமயத்தில் அத்தியாவசியமாகும்." என்று 03/11/1906 நாளிட்ட "இந்தியா" இதழில் தொடர்கிறார்.

"An Indian Bank for Madras- சென்னையிலே ஓர் இந்திய பாங்க்" என்று 10/11/1906 "இந்தியா" இதழில் மேலும் தொடர்கிறார். சென்னையிலே முக்கிய தனவந்தரும் மிகுந்த செல்வாக்குடையவருமான சிறீ லாட் கோவிந்த தாஸ் 'இந்தியன் பேட்ரியட்' பத்திரிகையிலே ஒரு கடிதமெழுதியிருப்பதில் மேற்கண்டவாறு ஓர் பாங்க் ஸ்தாபிக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருப்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் படித்தோம்

இவர் பொதுஜனங்களுக்கு செய்து கொண்டிருக்கும் அறிக்கையை நமது நாட்டு மகாராஜாக்கள், ராஜாக்கள், நாட்டுக் கோட்டைச் செட்டிகள், மற்றுமுள்ள வர்த்தகர்கள், ஜமீன்தார்கள் முதலியவர்களெல்லாம் சிரத்தையுடன் கவனித்து இவரது நோக்கம் கைகூடுமாறு தம்மால் இயன்ற முயற்சிகள் புரிய முற்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

குளத்தங்கரை அரசமரம் இதன் பின்புலத்தில் எழுதப்பட்ட சிறுகதை. "குளத்தங்கரை அரசமரம்" என்பது 1915-ஆவது ஆண்டில் "விவேகபோதினி" இதழில் எழுதிய சிறுகதை புதுச்சேரியிலிருந்தபோது அவர் நடத்திவந்த கம்பநிலையம் என்னும் பதிப்பகம் வெளியிட்ட "மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்" என்னும் தொகுப்பில் இக்கதை இடம்பெற்றுள்ளது (Aiyar, 2020).

இதுவே தமிழின் முதல் சிறுகதை என்றும் கருதப்படுகிறது. ரவீந்திரநாத் தாகூரின் "மால்கோஷ்" கதையின் தழுவல். வங்கக்கதையின் கோணம் வேறு. தமிழ்க்கதையின் பார்வை வேறு. அரசமரம் கூறுவதான உத்தியும், முதன்மைப் பாத்திரங்கள் மீதான கதைசொல்லி அரசமரத்தின் வாஞ்சையும் வருணனையும் வேண்டுமானால் ஒப்பிடலாம்.

"குளத்தங்கரை அரசமரம்" கதையில் அரசமரம் தன் வாழ்வில் கண்ட ருக்மணி எனும் பெண்ணின் கதையைச் சொல்வதாக அமைகிறது. பிராமணகுலத்தைச் சேர்ந்த ருக்மணி, நாகராஜன் இருவரும் இளம்பிராய நண்பர்கள் அக்காலத்திய வழக்கப்படி பன்னிரண்டு வயதிலேயே இருவருக்கும் திருமணம் நடைபெறுகிறது. ருக்மணியின் தந்தை காமேசுவரையரின் செல்வச்செழிப்பும் அவரது மனைவி மீனாட்சியம்மாளின் பண்பும் சம்பந்தி இராமசுவாமி ஐயர் - ஜானகிக்கு பிடித்துப்போகவே சிறார் திருமணம் நடைபெறுகிறது. *அர்புத்நாட் வங்கி திவாலடைந்ததால் அதில் பணம் போட்டு வைத்திருந்த காமேஸ்வரையர் பணமும் பறிபோனது. தாழ்நிலையடையும் குடும்பத்தைப் புறக்கணித்துவிட்டு நாகராஜனுக்கு இன்னொரு திருமணம் பண்ண முயற்சி எடுக்கின்றனர் நாகராஜன் பெற்றோர். நாகராஜன் நண்பன் சிறீநிவாசன் இதைக்கேள்வியுற்று நண்பனைத் தட்டிக்கேட்கவே, தான் நடத்தப்போகும் மறுமண நாடகத்தில் தமது பெற்றோர் 'ஆரியத்தன்மையைக் கைவிட்டு மிலேச்சத்தன்மை மேற்கொண்டதைத் தக்க நேரத்தில் வெளிப்படுத்திவிட்டு வந்துவிடுவதாகவும் மாமனார் குடும்பத்திடம் உண்மையைக்கூற நினைப்பதாகவும்' உறுதிகூறுகிறான்.

பெற்றோர் வீட்டில் வேதனையில் தவிக்கும் ருக்மணி குளத்தங்கரையில் நாகராஜனைச் சந்தித்து மறுமணம் குறித்து முறையிடுகிறாள். ஒன்றும் நேராது என்று சமாதானம் சொல்லிப்பிரிகிறான். ஆனால் ருக்மணி இதை ஏற்காது பயந்து குளத்தில் குதித்துத் தற்கொலை செய்துகொள்ள, அதிர்ச்சியுற்ற நாகராஜன் அழுதுபுலம்பி உடைகளைக் கிழித்துக் கொண்டு பெற்றோர் காலில் 'சாஷ்டாங்கமாய் விழுந்து, நமஸ்காரம் பண்ணிவிட்டு யாருடனும் பேசாமல் கௌபீனதாரியாய்ப் புறப்பட்டுப் போய்விட்டான்' … அதாவது, சன்னியாசம் வாங்குவதாக முடிகிறது கதை.

அரசமரத்தின் பார்வையாக இதில் ஆசிரியர் தமது கருத்தைப் பயன்படுத்திய உத்தியும் ருக்மணி மீதான வாஞ்சையும் அருமையாக எதிரொலிக்கிறது. "என்னுடைய எண்ணமத்தனையும் பாழாக்கிவிட்டு ஜூலியெத் மாதிரி பறந்தோடிப் போய்விட்டாயே ருக்மிணி! "என்று கதறும் நாகராஜன் ஷேக்ஸ்பியரின் துன்பியல் நாடகக்கதையான "ஹேம்லட்" நாயகனின் காலந்தாழ்த்தும் தலைமைப்பண்புக் குற்றத்தினால் அதன்நாயகி துன்பியல் முடிவைத்தேடும் 'ஒபீலியாவாக' ருக்மணியை மாற்றிவிட்டான்! (ஹேம்லட் நாடகத்தில் ஹேம்லட்டைக்காதலித்து அவன் வெறுத்ததால் ஒபீலியா மனமுடைந்து குட்டையில் இறங்கி மூழ்கி தன்னைத்தானே மாய்த்துக்கொள்கிறாள்.

இக்கதையில் தனிமனித ஒழுக்கம் எது? நாகராஜனின் விளையாட்டுத்தனமா? 'மநுதர்மசாஸ்திரம்' முதலான சாத்திரங்கள் வெளிப்படுத்தும் 'ஆர்யத்தன்மை மிலேச்சத்தன்மையானதாக மாறிய' நீர்த்துப்போன தன்மையா?

"நீ யாருக்கும் சொல்லக்கூடாது, இவர்களெல்லாம் ஆரியத் தன்மையை விட்டு மிலேச்சத்தனமாய் நடக்க உத்தேசித்திருக்கிறபடியால், இவர்களை நன்றாக அவமானம் செய்துவிட வேண்டியதென்று நிச்சயித்துவிட்டேன்." என்று நண்பன் சிறீநிவாசனிடம் கூறுகிறான் நாகராஜன். நாகராஜன் மனதும் முழுதுமாகச் சுத்தமில்லை.

"கட்டாயப் படுத்தத்தான் போகிறார்கள். முகூர்த்தப் பந்தலிலும் உட்காருவேன். ஆனால் என்ன இருந்தாலும் திருமங்கலியத்தில் நான்தானே முடிச்சப் போடவேணும்? வேறு ஒருவரும் போட முடியாதே. அந்த சமயத்தில் கண்டிப்பாக மாட்டேனென்று சொல்லிவிடப் போகிறேன். எல்லோரும் இஞ்சிதின்ற குரங்கு போலே விழிக்கட்டும். ருக்மிணியைத் தொட்ட கையினாலே இன்னொரு பெண்ணையும் நான் தொடுவேன் என்றிருக்கிறாயா? என்று சொல்லி முடித்தான்."

இன்னொரு கல்யாணத்தைப் பாதியில் நிறுத்தி அந்த மணப்பெண்ணை மட்டும் ஏமாற்றலாமாக்கும் என்று முதன்மை மாந்தனின் தனிமனித ஒழுக்கத்தையும் கேள்விக்குள்ளாக்குகிறது.

நாகராஜனின் காலந்தாழ்த்தும் விளையாட்டுத்தனம் மட்டுமல்ல அவலமுடிவுக்குக் காரணம் உளுத்துப்போன சாத்திரங்கள் தடைசெய்யாத சிறார் மணம், பண ஆதாயத்திற்காக நடக்கும் பிறிதொரு மணத்திற்குத் தடைவிதிக்காத சாத்திரம், ஆணாதிக்கத்திற்கு உட்பட்ட பெண்ணடிமைத் தனத்தை வலியுறுத்தும் 'மநுதர்மம்,' இதையும் தாண்டி இந்திய வாடிக்கையாளர்கள் பணத்தை ஏப்பமிட்ட பிரிட்டன் ஆர்புத்நாட் வங்கியின் செயல்பாடுகள் எல்லாமுமே ஒழுக்கக்கேடானவையே!

"பெண்கள் மனசு நோகும்படி ஏதாவது செய்யத் தோணும்போது இனிமேல் இந்தக் கதையை நினைத்துப் பார்த்துக் கொள்ளுங்கள். விளையாட்டுக்காகக் கூடப் பெண்ணாய்ப் பிறந்தவர்களின் மனதைக் கசக்கவேண்டாம்" என்றுசொல்லி முடிக்கும் முன்பு வவேசு, காளிதாசனின் "பெண்ணியலாரின் அன்பு நிறைந்த இருதயம் பூப்போல மிகவும் மெல்லியது அன்புக்குக் கேடுவரின், உடனே விண்டு விழுந்துவிடும்." (குஸூம ஸத்ருசம் ......ஸத்ய: பாதி ப்ரணயி ஹ்ரிதயம்) எனும் மேற்கோளையும் குறிப்பிடுகிறார்.

பெண்களை ஒடுக்கும் ஆணாதிக்க தர்மசாத்திரத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, மனதைத்தொடும் காளிதாசனின் காவியசாத்திரம் மூலம் பெண்ணியத்தின் மென்மையை உணர்த்திய இக்கதை நம் மனதில் என்றும் நிலைபெற்று நிற்கிறது.

## 1930களில் புதுமைப்பித்தன் காலத்திலேயே "பொன்னகரம்"

"முற்பட்ட நாவல்களில் ஒழுக்கவியலென்பது பொதுவாக மாந்தரின் குடும்ப, சமுதாய உறவுகள் சம்பந்தமான ஐயங்கள், மனப்போராட்டங்கள் முதலியவற்றைக் குறித்தது. நமது பழைய மரபிலே 'தர்மம்' என்னும் சொல் குறித்த பரந்து விரிந்த பொருளில் ஒழுக்கவியல் அல்லது ஒழுகலாறு" - என்ற கைலாசபதி அவர்களின் கருத்தியலின்படி 1930களில் காலத்திலேயே கேள்விகள் எழுப்பப்படுகின்றன. அவரது கச்சிதமான விரசமற்ற சிறுகதையான "பொன்னகரம்" இதன் வெளிப்பாடு. மணிக்கொடி சிற்றிதழில் 1934-ஆவது ஆண்டு வெளிவந்தது (Venkatachalapathy, 2000).

ரயில்வே தண்டவாளத்தின் பக்கமாக சாராய டிப்போ போகும் வழியில் சேற்றுக் குழம்புகளாக 'கறுப்பு யமுனை' ஓடும் இடம் ... ஜட்கா முருகேசன், மனைவி மில் கூலி அம்மாளு, முருகேசன் தாயார், தம்பி, முருகேசன் குதிரை - இவையே பாத்திரங்கள். வீட்டு வாடகை, போலீஸ் மாமூல், தம்பிக்கு திருட்டுக் கஞ்சா அடிக்க என்று காசு தேவை. குடித்துவிட்டு ஜட்கா ஓட்டும்போது ஏற்பட்ட சிறு விபத்தில் குதிரைக்குக் காயம், முருகேசனுக்கு ஊமையடி. வீக்கத்துக்கு எதையோ அரைத்துப் பூசும் அம்மாளு புருஷனுக்குப் பால் கஞ்சி வேண்டுமாம்.

கூலி வாங்க இன்னும் இரண்டுநாள் இருக்க, என்ன செய்வது என்ற கவலைப்பட்ட அம்மாளு, தண்ணீர் எடுக்க வந்து, தன்மீதுரொம்ப நாளாகக் 'கண்' வைத்திருந்தவனுடன் இருளில் மறைந்து முக்கால் ரூபாய் சம்பாதித்து பால்கஞ்சி வார்க்கிறாள். "என்னமோ கற்பு, கற்பு என்று கதைக்கிறீர்களே! இதுதான் ஐயா, பொன்னகரம்!" என்று முடிகிறது கதை. இந்தச் சந்தில் உள்ள 'உலகம் வேறு தர்மங்களும் வேறு' என்பதாக உணர்த்தி பழைய மரபைத் தகர்க்கிறார். பட்டவர்த்தனமாக இல்லாமல் குறிப்பாக உணர்த்தும் ஆற்றல் கொண்டிருந்த புதுமைப்பித்தன் ஒழுக்க வரையறையானது அதுவரையிலான மரபிலிருந்து மாறுபட்டது.

## 1990-களின் காதல் போர் வியாபாரம்

களம் தலைநகரம் தில்லி நெற்றியில் சந்தனக்கீற்று குங்குமப்பொட்டு சகிதம் கை, கால் குட்டையான ஐம்பது வயது பாபு எப்போதும் புன்னகையுடன் உயர்தர அரசு அதிகாரிகள், தொழிலதிபர்களுடன் 'லையசான்' வைத்திருக்கும் உயர்மட்ட அதிகாரி. குடும்பப் பெண்களுக்கு திருவரங்கம், மதுரை, திருப்பதி, பழனி கோவில் பிரசாதங்களை பக்திப் பரவசத்துடன் வழங்கிவருபவர்.

திருப்பதி வெங்கடாசலபதி, முருகன், பிள்ளையார், சத்யசாய் பாபா, தாடி வைத்த இன்னும் வேறு சாமியார்கள் - எல்லாப் படங்களுடன் மல்லிகை ஊதுவத்தி மணத்துடனுமுள்ள மெரினா ஹோட்டல் அறையில் முப்பது வயது இளைஞன் மணி நடத்தும் பூஜையைக்காண, கதைநாயகரான பேராசிரியரை அழைத்துக்கொண்டு போகிறார். சந்தனம், திருநீறு, மல்லிகை, ஊதுவத்தி மணத்தோடு அறை 'தெய்வீக மணம்' கமழ்கிறது. மணி அடித்து தீபாராதனை, ஆப்பிள், திராட்சை உள்ளிட்ட பழங்கள் சகிதம் நைவேத்யம் பூஜை நிகழ்ந்துமுடிய, திருவாதிரை ஊர்த்துவமுக நட்சத்திரம், ராஜதர்சனம் என்று சுவையான உரையாடல் தொடர்கிறது. 'ஆன்மாவை அடகுவைத்த டாக்டர் பாஸ்டஸ்' கதையையும், ஹெலனையும் சொல்லி அசரவைக்கிறான் மணி.

'எல்லோரும் இன்புற்றிருப்பதைத் தவிர வேறொன்றும் அறியேன் பராபரமே! ' என்றிருப்பவனே ஒரு நல்ல லையசான் ஆள் என்கிற வாதத்தை வைக்கும் பாபுவிற்கு இலக்கிய ஞானம் அதிகமில்லை! இந்நிலையில் கண்ணாடி தம்ளர்கள் சோடா, ஐஸ் இத்யாதியுடன் ஹோட்டல்காரப்பையன் அறைக்குள் வருகிறான். பஜனை சமாஜ் தலைவர், ஏற்றுமதி - இறக்குமதித்துறை இயக்குநர் உயர்அதிகாரிகள் உள்ளிட்டோர் பிந்தைய 'பூஜைக்கு' வருகின்றனர். பாபுவின் மூத்த மகள் சாவித்திரி திடீரென உள்ளே நுழைவதைப் பார்த்து அதிர்ந்த பாபு, அவளிடம் வெளியேறுமாறு கத்துகிறார்.

'பூஜையை' நீங்களே பாருங்கள் நான் மணியைப் பார்க்கவே வந்தேன். இருவரும் உணவு உட்கொள்ள வெளியே செல்கிறோம் என்று அவள் கூற, அதிர்ச்சி அடைகிறார் பாபு. "பாபுவின் அனுமதிக்காக இருவரும் காத்திருக்கவில்லை" என்று கதை முடிகிறது! 'பூஜை' என்பது இங்கு 'நீலப்படத்திற்கான' இடக்கரடக்கல் பதம்! தில்லியின் உயர்மட்ட அதிகார வர்க்கத்தின் பலவீனம் இங்கு அலசப்படுகிறது. இது, கோமல் சுவாமிநாதனை ஆசிரியராகக் கொண்ட 'சுபமங்களா' மாத இதழில் இந்திரா பார்த்தசாரதி எழுதிய "காதல் போர் வியாபாரம்" சிறுகதையாகும் (Ilayabharathi, 2000). 1990-களின் உலகம்! ஆன்மிகப் பூச்சோடு உயர்மட்டத்தின் திரைமறைவில் நடக்கும் பாலியல் வேட்கை வியாபாரம் குறித்த சமூக அங்கதக்கதை!

எம்.ஏ. முடித்துவிட்டு பொருத்தமான வேலைகிடைக்காது இழிதொழில் 'பிழைப்பு' நடத்தும் மணியின் இலக்கிய மனத்தை பாபுவின் மகள் சாவித்திரி அங்கீகரித்து நட்புக்கொள்கிறாள். மணியின் இலக்கிய ஞானத்தை பேராசிரியர் குறிப்பால் உணரமுடிகிறது! ஆனால் ஞானசூனியமான 'லையசான்'

அதிகாரி உணரவியலாதபடி இங்கு அவரைப்போன்றோரின் 'வாழ்க்கை' அமைவது நகைமுரண்! இராமகிருஷ்ண பரமஹம்சரின் உபகதைகளில் ஒன்றில் வருவதைப்போல - தாசி வீட்டுக்கு வந்த நண்பன் ஆலயத்தையே நினைத்ததால் சொர்க்கமும், தாசி வீட்டையே நினைத்து ஆலயத்தில் வழிபடுபவனுக்கு நரகமும் கிடைப்பதான கதையை நினைவுபடுத்துகிறது. - உண்மையில், மணி வாழ்கிறான் ஆனால், பாபு பிழைக்கிறார்!.

## முடிவுரை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம், நடு, இறுதி தொட்ட சிறுகதைகளுக்கான பின்புலம் இம்மூன்று சிறுகதைகளிலும் குறிப்பாக உணர்த்தப் பட்டுள்ளது. பிரிட்டிஷ் அர்புத்நாட் வங்கி ஊழலில் திளைத்ததால் திவாலானது, இந்திய உயரதிகாரிகள் அதில் போட்டு வைத்திருந்த சேமிப்பும் திவாலாகி குடும்ப பொருளாதாரத்தை சிதைத்து விட்டது. (சுதேச வங்கி தொடங்க பெரும் செல்வந்தர்களை வேண்டும் பாரதியாரின் கனவு, சுதேசிய இந்தியன் வங்கி என்ற நனவாக பின்னாளில் உருவாகியது குறிப்பிடத்தக்கது.) சிறார் மணம், மறுமணம் குறித்த சமூகக்கேடுகளால் பாழாகும் அபலைப் பெண்ணின் வாழ்வியலை இக்கதை ஐந்தறிவு உயிரி வழி ஆறறிவு மனிதர்க்கு உணர்த்துகிறது. விளிம்பு நிலையில் வாழும் சென்னை சேரிவாழ் மக்கள் சிலரின் உலகில் கற்பு குறித்த இடம் அவலம் நிறைந்திருந்தாலும் வேறு போக்கிடம் இல்லை என்பதைப் 'பொன்னகரம்' கச்சிதமாக உணர்த்துகிறது. 'காதல் போர் வியாபாரம்' ஒரே குடும்பத்தைச் சார்ந்த இரு கதை மாந்தர்களை வெவ்வேறு திசைவழிகளில் பயணிக்க வைக்கிறது. சூழலியல் சார்ந்த தனிமனித ஒழுக்கம் என்பதாக நிலைநிறுத்துகிறது.

## References

Aiyar, VaVeSu. (2020), Tamizhil Muthal Sirukathai, Kulathankarai Arasamaram.

Ilayabharathi, (2000) Subhamangala Edhazh Thoguppu, Kalaignan Pathippagam, Chennai, India.

Kailasapathy, K. (2017) Tamiz Naaval Ilakkiyam, Kaalachuvadu Publications, Nagercoil, India.

Rathinakumar, N. (2016) Thiranaaivukkotpadugalum panmuka vasippikalum, kayal kavin Books, Chennai, India.

Venkatachalapathy, A.R. (2000) Pudumaippithan Kathaikal, Kaalachuvadu Publications, Nagercoil, India.

Viswanathan, Seeni, (1998) Kalavarisai Paduthapatta Bharati Padaippukal, Vol.1, Seeni Viswanathan, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License